<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 119/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பழனியப்பன் | நாள் | 26.04.2024 |
| தகப்பனார் பெயர் | செங்கோட கவுண்டர் | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) எதற்காக இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், 5ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்க கூடாது என பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தும், அது அமைந்துள்ள பகுதி முழுவதும் முறைப்படி DTCP அங்கீகாரம் பெற்ற மனை பகுதி என்றால், சரிதான். இவ்வழக்கில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளை பொறுத்தவரை என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், எனக்கு உரிமையுள்ள 20 அடி ரோட்டை 5ம் பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளதால், அவரது பெயருக்கு பட்டா வழங்க கூடாது என கோரி பரிகாரம் கேட்டுள்ளேன்.

2) 5ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையேதான் ரோடு சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால், சரிதான். 5ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனையினால்தான் இவ்வழக்கு எழுந்துள்ளது என்றாலும், 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கும், மேற்படி பிரச்சனைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால், சரிதான். ஆனால், அவர்கள் 5ம் பிரதிவாதிக்கு பட்டா கொடுக்ககூடாது என நான் கேட்டுள்ளேன்.

3) என்னுடைய வீடும், 5ம் பிரதிவாதியின் வீடும் எதிர் எதிரே அமைந்துள்ளது என்றால், சரிதான். அதனால் எங்களுக்கிடையே வழிதட பிரச்சனை உள்ளது என்றால், சரிதான். மேற்படி 20 அடி தடவழி அனைவருக்கும் பொதுவானது என்ற நிலையில், மேற்படி 5ம் பிரதிவாதிக்கும் அதை பயன்படுத்த உரிமையுள்ளது என்றால், சரிதான். ஆனால் அதை தடவழியாகத்தான் பயன்படுத்த முடியும். ஆனால் 5ம் பிரதிவாதி அதை ஆக்கிரமித்து 10அடி அகலத்திற்கு தொழுவம் அமைத்து இடையூறு செய்கிறார். மேலும் அதை தாண்டியும் எனக்கு உரிமையுள்ளது என பிரச்சனை செய்கிறார்.

4) மேற்படி ஆக்கிரமிப்பு சம்மந்தமாக வட்டாட்சியரிடம் மனு அளித்தேனா என்றால், அளித்தேன். அதனடிப்படையில் அவர்கள் வந்த பரிசீலனை செய்தனர். வேறு யாரிடம் மனு அளித்தேன் என்றால், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுபணித்துறை அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளேன். மேற்படி மனுவின் பெயரில் வருவாய் துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் வந்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்தனரா என்றால், வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

5) அவ்வாறு மேற்படி பிரச்சனை தொடர்பாக கடந்த 2008 ம் வருடத்தில் வருவாய் துறை மற்றும் பொதுப்பணி துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தபோதுதான் 5 ம் பிரதிவாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை தாக்கல் செய்தார் என்றால், சரிதான். மேற்படி நீதிபேராணை மனுவிலேயே கடந்த 07.06.2012 ம் தேதியில் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி 5 ம் பிரதிவாதிக்கு எதிராகவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால், சரிதான்.

6) மேற்படி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறைவேற்ற வருவாய் துறையினர் தயாராக உள்ள நிலையில், மீண்டும் 5 ம் பிரதிவாதி கடந்த 2017 ம் வருடத்தில் மற்றொரு நீதிபேராணை மனுவை தாக்கல் செய்தார் என்றால், சரிதான். மேற்படி நீதிபேராணை மனுவில் 5 ம் பிரதிவாதியின் கோரிக்கையை 6 வார காலத்திற்குள் பரிசீலித்து அதன் பேரில் சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது என்றால், சரிதான்.

7) மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவு படி மேற்படி 5 ம் பிரதிவாதியின் மனுவை பொதுப்பணித்துறை அதிகாரிகள் சட்டப்படி பரிசீலித்து அவரது மனுவை நிராகரித்து உத்தவிட்டுள்ளனர் என்றால், சரிதான். மேற்படி நடவடிக்கைகளிலிருந்து தப்பிக்கும் நோக்கில் மேற்படி சங்கதிகளை மறைத்து 5 ம் பிரதிவாதி மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.8/2018 என்ற வழக்கை தாக்கல்

செய்து, மேற்படி வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். அதேபோல், அ.வ.எண்.139/2018 என்ற வழக்கை தன்னை பூரண அனுபவதாரர் என விளம்ப கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி இரு வழக்குகளும் தற்போது நிலுவையில் உள்ளது என்றால், சரிதான்.

8) எனக்கும், 5ம் பிரதிவாதிக்குமிடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாக அரசு தரப்பினரை தேவையற்ற நபர்களாக இவ்வழக்கில் சேர்த்து 1ம் முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் மேற்படி பிரதிவாதிகைளை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல. நான் அளித்த மனுவின் பேரில் 1ம் முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் சட்டப்படியான நடவடிக்கைகள் எடுத்துள்ளதால், மேற்படி பிரதிவாதிகளை பொறுத்து நான் எவ்வித பரிகாரமும் கோர இயலாது என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.